**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.11/2025

வாதி தரப்பு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 30.07.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.2– சரவணன் த/பெ அண்ணாதுரை</u>**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல சம்மன் வந்ததா என்றால் இல்லை. வாதி செல்வி கேட்டுக்கொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்து வருகிறேன். எனது வீடு ரெங்கநாதபுரத்தில் இருந்து தாவா சொத்தில் இருந்து 25 கி.மீ தள்ளி உள்ளது என்றால் 12 கி.மீ. தள்ளி உள்ளது. என்னுடைய பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள அனைத்து விவரங்களும் சரிதான்

2. வாதி செல்வி எனது வீட்டுக்கு எதிர்வீட்டுக்காரர் என்றால் சரிதான். செல்வி கணவர் பாலுசாமி எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். பாலுசாமிஎனக்கு நண்பர் என்பதாலும் வாதி எனது எதிர்வீட்டுக்காரர்என்பதாலும் அவர்களுக்க ஆதரவாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவாசொத்து செல்வி யின் அம்மா சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து செல்விக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான் செல்வி சொல்லித்தான் தெரியும்.

3. தாவா சொத்து எந்த தெருவில் உள்ளது என்றால் தெரு பெயர் தெரியாது. தாவா சொத்து பற்றி வேறு என்ன தெரியும் வீட்டு எண். 113 ஆகும். அந்த வீட்டின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2 3/4 செண்ட் ஆகும். அதில் என்ன வீடு உள்ளது என்றால் தொகுப்பு வீடு உள்ளது. தொகுப்பு வீடு என்றால் அரசாங்கத்தால் கட்டப்பட்ட வீடு உள்ளது. அந்த வீடு எப்போது கட்டப்பட்டது என்றால் 10 வருடத்திற்கு முன்பு கட்டப்பட்டது. அந்த வீட்டின் நான்கெல்லை தெரியுமா என்றால் வீட்டின் தென்புறம் கிழமேல் பாதை உள்ளது கிழக்கு வீடு உள்ளது மேற்கு காலிமனை, வடக்கு வீடு உள்ளது. வடக்கில் உள்ள வீடு யார் பெயரில்உள்ளது என்றால் வாதி செல்வி பெயரில் உள்ளது.

4. கிழக்கு பக்கம் உள்ள வீடு யார் என்று தெரியாது. மேற்கு காலிமனை உள்ள இடம் யார் என்று தெரியாது. வீட்டு வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. கிழக்கு பக்க வாசலில் இருந்து தென்புறம் வந்து ரோட்டிற்கு வரவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் வீடு கட்டவில்லை காலி மனை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து முழுவதும் வீடு உள்ளது என்றால் தவறு என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல வாதி எதிர்வீட்டுக்காரர்என்பதாலும் அவரது கணவர் எனது நண்பர் என்பதாலும் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. வாதி செல்வி எனது வீட்டின் அருகில் குடியிருக்கிறார் தாவா இடத்தில் குடியிருப்பதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தொகுப்பு வீடு வாதி அம்மா பெயரில் ஏற்பட்டது என்றால் சரியாக தெரியாது. வாதி எனது நண்பரின் மனைவி என்பதால் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது ஊருக்கும் தாவா சொத்து உள்ள ஊருக்கும் இடையே 20 கி.மீ தூரம் உள்ளது நான் தாவா சொத்திற்கு செல்ல வாய்ப்பில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/—திரு.ஆர்.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.